**செய்தி வெளியீடு எண்: 627** **நாள் : 06.12.2015**

<u>செய்தி வெளியீடு</u>

சென்னை மாநகரில் நாளொன்றுக்கு 11.5 இலட்சம் லிட்டர் ஆவின் பால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. வடகிழக்கு பருவமழையினால் சென்னை மாநகரில் ஏற்பட்ட பெருவெள்ளம் காரணமாக, பொதுமக்களுக்கு எவ்வித இடையூறுமின்றி, ஆவின் பால் தங்குதடையின்றி கிடைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அந்த உத்தரவிற்கிணங்க, ஆவின் நிர்வாகத்தால் போர்க்கால அடிப்படையில், உரிய நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு, சென்னை மாநகரில் நேற்று (5.12.2015) 10.2 இலட்சம் லிட்டர் பாலும், இன்று (6.12.2015) 10.8 இலட்சம் லிட்டர் பாலும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேலும் மற்ற மாவட்டங்களில் உள்ள பால்பண்ணைகளிலிருந்தும், 1.5 இலட்சம் லிட்டர் பால் வரவழைக்கப்பட்டு, சென்னை மாநகரம் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் உள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில், சீரான முறையில் பால் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

தற்போது ஆவின் நிர்வாகத்தால் அரை லிட்டர் Toned Milk (Blue Colour Packet) மாதாந்திர பால் அட்டைதாரர்களுக்கு 17 ரூபாய்க்கும், சில்லறை விற்பனைக்கு 18 ரூபாய் 50 பைசாவிற்கும், Standardized Milk (Green Colour Packet) அரை லிட்டர் மாதாந்திர பால் அட்டைதாரர்களுக்கு 19 ரூபாய் 50 பைசாவிற்கும், சில்லறை விற்பனைக்கு 20 ரூபாய் 50 பைசாவிற்கும், Full Cream Milk (Orange Colour Packet) அரை லிட்டர் மாதாந்திர பால் அட்டைதாரர்களுக்கு 21 ரூபாய் 50 பைசாவிற்கும், சில்லறை விற்பனைக்கு 22 ரூபாய் 50 பைசாவிற்கும், Double Toned Milk (Magenta Colour Packet) அரை லிட்டர் மாதாந்திர பால் அட்டைதாரர்களுக்கு 16 ரூபாய் 50 பைசாவிற்கும், சில்லறை விற்பனைக்கு 17 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. மேற்காணும் விலையைக் காட்டிலும் அதிக விலைக்கு பால் பாக்கெட்டுகள் விற்பனை செய்யப்பட்டாலோ, அல்லது தங்கள் பகுதிகளில் பால் விநியோகம் தடைபட்டாலோ, பொதுமக்கள் இது தொடர்பாக 9840387510, 9840907494, 9443944908 என்ற அலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு தெரிவித்தால்,

சம்பந்தப்பட்ட நபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு, பால் விநியோகம் தொய்வின்றி தொடர்ந்து கிடைக்க வழிவகை செய்யப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சென்னை, காஞ்சிபுரம், கடலூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு பால் பவுடர் தொடர்ந்து தங்குதடையின்றி வழங்கப்பட்டு வருகிறது. சென்னை மாநகரில் மட்டும் நேற்று (5.12.2015) 75 டன் அளவிற்கும், இன்று (6.12.2015) 55 டன் அளவிற்கும், ஆக மொத்தம் 130 டன் அளவிற்கான பால் பவுடர் நிவாரண முகாம்களில் உள்ள மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஆக மொத்தம், இன்று வரை (6.12.2015) சென்னை, கடலூர், திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கு 453 டன் பால் பவுடர் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள, பதினைந்து கண்காணிப்புக் குழுக்கள், ஆவின் பால் சீராக வழங்கப்படுகிறதா என்பது குறித்தும், நிர்ணயிக்கப்பட்ட விலையில் விற்பனை செய்யப்படுகிறதா என்பது குறித்தும் மற்றும் நிவாரண முகாம்களில் பால் பவுடர் முறையாக விநியோகம் செய்யப்படுகிறதா என்பது குறித்தும் ஆய்வு செய்து வருகின்றனர். மேலும், கீழ்க்கண்ட அவர்களது அலைபேசி எண்களிலும், பொதுமக்கள் ஆவின் பால் மற்றும் பால் பவுடர் விநியோகம் குறித்து தங்களது குறைகளைத் தெரிவிக்கலாம். 9449975518, 9841762577, 9840335202, 9444854300, 9443093126, 9445001109, 9444732720, 9840363896, 9445001110, 9840120004, 9884001987, 9445001108, 9445127272, 9445195912 மற்றும் 9445001112.

ஆவின் நிர்வாகம்

*****

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**